சார்பு நீதிமன்றம், பெருந்துறை
**OS** 06/2024

2025-ம் ஆண்டு அக்டோபர் மாதம் 31 ம் நாள் Dw1 தரப்பு சாட்சியின் வாக்குமூலம் 1969-ம் ஆண்டு 44 வது சட்டம் பிரிவு 6(2)ன் படி திரு.அஷ்பக் அகமது, பி.ஏ.,பி.எல்., சார்பு நீதிபதி அவர்களால் ஆணையிட்டு பிரமாணம் செய்யப்படுகிறது.

நாள் 31.10.2025

Dw1 (கார்த்திகேயன் )

**வாதி தரப்பில் குறுக்கு விசாரணை**

நானும் வாதியும் ஒரே கிராமத்தை சேர்ந்தவர்கள் என்றால் சரிதான். நான் 8 ம் வகுப்பு வரை படித்துள்ளேன். நான் அரிவாள் பட்டறை வைத்துளளேன். எனக்கு 2 மகன்கள், அவர்கள் பொறியியல் படிப்பு படித்துள்ளனர். வாதியை எனக்கு தெரியும். வாதிக்கு எவ்வளவு பூமி உள்ளது என்று எனக்கு தெரியாது. வாதிக்கு தொழில் மற்றும் விவசாய வகையில் எவ்வளவு வருமானம் வருகிறது என்று எனக்கு தெரியுமா என்றால் எனக்கு தெரியாது, ஆனால் அவருக்கு வசதி குறைவு. நான் எனது எதிர்வழக்குரையில் என்ன கட்சி செய்துளளேன் என்றால் கடனுறுதி சீட்டு மோசடியானது என்று சொல்லியுள்ளேன். வாதி எனக்கு வழக்கறிஞர் அறிவிப்பு தாவா கடன் குறித்து அனுப்பியிருந்தார் என்றால் சரிதான். நான் பதிலறிவிப்பு கொடுத்துள்ளேன். நான் பதிலறிவிப்பில் பணம் வாங்கவில்லை என்றும் மோசடியாக வழக்கு தாக்கல் செய்திருப்பதாக குறிப்பிட்டுள்ளேன். நான் வழக்கு கடனுறுதி சீட்டை பார்க்காமல் அதை மறுத்துள்ளேன் என்றும் மற்றும் அது மோசடி ஆவணம் என கட்சி செய்துள்ளேன் என்றால் சரியல்ல, நான் பணம் வாங்கவில்லை அதனால் மோசடி என குறிப்பிட்டுள்ளேன். நான் அனுப்பிய பதிலறிவிப்பிற்கு வாதி மறு அறிவிப்பு அனுப்பியிருந்தார் என்றால் சரிதான். நான் மறு அறிவிப்புடன் வந்த கடனுறுதி சீட்டை பார்த்த பின் நான் மீண்டும் பதில் எதுவும் அனுப்பவில்லை. எனது எதிர்வழக்குரையில் இது பற்றி நான் எதுவும் சொல்லவில்லை என்றால் சரியல்ல. வாசாஆ 1 கடனுறுதி சீட்ட்டில் கையொப்பங்கள் மற்றும் ரேகை உள்ளது, ஆனால் அந்த கையொப்பம் மற்றும் ரேகை என்னுடையதல்ல. கடனுறுதி சீட்டில் உள்ள கையொப்பம் மற்றும் கைரேகை மறுத்துள்ள நிலையில் அதிலுள்ள கையொப்பம் மற்றும் கைரேகையை ஒப்பீடு செய்ய நான் நடவடிக்கை எதுவும் எடுக்கவில்லை என்றால் சரிதான். கையொப்பம் மற்றும் கைரேகையை

தொடர்பாக எனது ஒப்புக் கொள்ளப்பட்ட



கையொப்பம் மற்றும் கைரேகை நான் தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான். வாசா1 கடனுறுதி சீட்டில் உள்ள கையொப்பம் மற்றும் கைரேகை என்னுடையது என்பதால் தான் அதை நான் ஒப்பீடு செய்ய எந்தவித நடவடிக்கையும் தொடரவில்லை என்றால சரியல்ல. எனது முதல் விசாரணையில் வாசாஆ 1ல் உள்ள கையொப்பம் மற்றும் கைரேகை மறுத்துள்ளநிலையில் அது குறித்து எனது எதிர்வழக்குரையில் நான் எவ்வித மறுப்பும் தெரிவிக்கவில்லை என்றால் சரியல்ல. வாசாஆ 1ன் படி நான் வாதியிடம் சாட்சிகள் முன்னிலையில் தொகை பெற்றுக் கொண்டு கடனுறுதி சீட்டு ஏற்படுத்திக் கொடுத்தேன் என்றால் சரியல்ல. எனது முதல் விசாரணையில் நான் ஒரு சி எஸ் பழனிசாமியிடம் பணம் பெற்றுக் கொண்டு அவருக்கு ஆவணங்கள் ஏற்படுத்திக் கொடுத்ததாக சொல்லியுள்ள விவரம் குறித்து எனது எதிர்வழக்குரையில் நான் குறிப்பிடவில்லை என்றும்தற்போது தான் முதன் முறையாக கூறுகிறேன் என்றும் அது சட்டப்படி ஏற்றுக் கொள்ளக்கூடியதல்ல என்றால் சரியல்ல. வாதியும் சிஎஸ் பழனிசாமியும் உறவினர்கள் அந்த வகையில் தாவா தாக்கல் செய்திருப்பதாக முதல் விசாரணையில் சொல்லியுள்ள விவரம் எனது எதிர்வழக்குரையில் சொல்லப்படவில்லை என்றும் அதனால் அது ஏற்றுக் கொள்ளக்கூடியதல்ல என்றால் சரியல்ல. நான் முதல் விசாரணையில் சொல்லியுள்ள எனது வீட்டின் சுற்றுச் சுவர் தொடர்பான பிரச்சினை அது சாலையை அகலப்படுத்துவதற்காக அகற்றப்பட்டது போன்றவைகளை நான் எனது எதிர்வழக்குரையில் சொல்லவில்லை என்பதால் அவை ஏற்றுக் கொள்ளக்கூடியதல்ல என்றால் சரியல்ல. இது சம்பந்தமாக குற்ற வழக்கு உள்ளது என்றும் நானும் ஒரு வழக்கு தொடர்ந்திருப்பதாக முதல் விசாரணையில் சொல்லிய விவரத்தை எனது எதிர்வழக்குரையில் சொல்லவில்லை என்பதால்அவை ஏற்றுக் கொள்ளக்கூடியதல்ல என்றால் சரியல்ல. வாதி சாட்சிகள் சந்தோஷ்குமார் மற்றும் மற்றவர்கள் துணையுடன் கடனுறுதி சீட்டை ஏற்படுத்தியதாக சொல்லியுள்ள விவரத்தை நான் எனது எதிர்வழக்குரையில் சொல்லவில்லை என்பதால் அது ஏற்றுக் கொள்ளக்கூடியதல்ல என்றால் சரியல்ல. எனது எதிர்வழக்குரையில் குறிப்பிடாத விசயங்களை முதல் விசாரணையில் குறிப்பிட்டுள்ளதால் அந்த விவரங்கள் குறித்து எனது சாட்சியம் ஏற்றுக் கொள்ளக்கூடியதல்ல என்றால் சரியல்ல. வாசாஆ 1 கடனுறுதி சீட்டிற்கும் பிசாஆ 1 ஆவணத்திற்கும் தொடர்பில்லை என்றால் சரிதான். சாட்சி அந்த ஆவணத்தை நான் பிசி பழனிசாமி வாதி மற்றும் சாட்சிகள் ஒருவருக்கொருவர் தெரிந்தவர் என்று காட்டுவதற்காக முன்னிலைபடுத்தியிருப்பதாக கூறிகிறார். பிசாஆ 2 முதல் 4 வரையான

ஆவணங்களுக்கும் வாதிக்கும் எந்த தொடர்பும் இல்லை என்றால் சரியல்ல. நான்



வாதியிடம் வாசாஆ 1 ன்படி சாட்சிகள் முன்னிலையில் ரூ.5,00,000/- பெற்றுக் கொண்டு கையொப்பம் மற்றும் கைரேகை செய்து வாசாஆ 1 கொடுத்துளளேன் என்றும் வழக்கிற்காக தற்போது அந்த ஆவணத்தை முழுமையாக மறுக்கிறேன் என்றால் சரியல்ல. நான் வாதிக்கு தாவா கடனை வட்டியுடன் செலுத்த கடமைபட்டுள்ளேன் என்றால் சரியல்ல. வாதி கோரியவாறு தீர்ப்பாக வேண்டும் என்றால் சரியல்ல.

Dictated by me in Open court typed by Typist and read over to the witness and acknowledge by him/her to be correct.

M ASHFAQ AHAMED

Digitally signed by M ASHFAQ AHAMED
Date: 2025.10.31 16:40:25 +0100

Subordinate Judge,
Perundurai.

uploaded by SS